1978 பிப்ரவரி 25]

எடைக்கற்கள்.

*வினு—267 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) எடைக்கற்களில் தமிழ்-ஆங்கிலம் என்று இருந்த தற்குப் பதிலாக ஹிந்தி- ஆங்கிலம் என குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினுவுக்கு இடமில்லை.

நக்ஸலேட் கைதிகள்

*வினு—268 திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நமது மாநில சிறைச்சாலைகளில் Naxalite கைதிகள் இருக்கிருர்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள் எண்ணிக்கை என்ன?

THE HON THIRU K. NARAYANASWAMY MUDALIAR :

(a) yes

(b) Twenty Nine.

தொழிற்கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்

*வினு—269 திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்லூரி பொறியியல் கல்லூரி மற்றும் தொழிற் நுணுக்கக் கல்லூரிகளில் எந்தெந்த சமூக மக்களுக்கு எவ்வளவு இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?